2013 ஏப்ரல் 10]

அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்த கமிட்டியானது எந்தவகையில் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கல்வியியல் கல்லூரிகளிடமிருந்து மனுக்கள் பெற்றும், மாணவர்களிடமிருந்து மனுக்கள் பெற்றும், ஆய்ந்து, கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான், தரச் சான்றிதழ் பெற்ற இளநிலை கல்வியியல் பட்டப் படிப்பிற்கு ரூ.46,500/– எனவும், தரச் சான்றிதழ் இல்லாத இளநிலை கல்வியியல் பட்டப் படிப்பிற்கு ரூ.41,500/– எனவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரை, அரசு நிர்ணயிக்கவில்லை. கல்விக் கட்டணக் குழுதான் நிர்ணயித்திருக்கிறது. மாணவர்களைப் பொறுத்தவரை, கல்வியியல் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயில்வதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், எங்கெல்லாம் கல்வியியல் கல்லூரிகள் அரசாங்கத்தின்மூலம் தொடங்கப்பட வேண்டுமோ, அங்கெல்லாம் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று ஆலோசிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

வேளாண்மைக் கல்லூரி

***26518—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீரை வரவிடாமல் சதி செய்தவர்களை, தன் மதியால் வென்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்வாய்ந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் நலன் பேணும்வகையில், வேளாண்மைக் கல்லூரி அமைக்க, வரும் நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தின் அருகிலுள்ள திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டியில் ஒரு வேளாண்மைக் கல்லூரியும், ஒரு மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியும், குமுளூரில் ஒரு வேளாண் பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கடந்த ஆண்டு முதல் வேளாண் பட்டயக் கல்லூரி புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இக்கல்லூரியில் சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது.

இதுதவிர, அந்தந்தப் பகுதிகளுக்கேற்ற தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க, புதுக்கோட்டை மாவட்டம், வம்பனில் இயங்கிவரும் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையமும், வேளாண் அறிவியல் நிலையமும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. இருந்தாலுங்கூட, மாண்புமிகு

2013 ஏப்ரல் 10]

உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, தேவைப்படின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். இறைவன்கூட கேட்டால்தான் கொடுப்பார். ஆனால், கேட்காமலேயே கொடுக்கின்ற இறைவனாக இருக்கக்கூடிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டை மாவட்டத்திலே சுமார் 1,280 ஏக்கர் நிலப்பரப்பு உள்ள குடுமியான்மலை, அரசுப் பண்ணையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே ஆய்வு செய்து, பட்டயக் கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவளித்திருக்கிறார்கள். தொகுதி மக்கள் மற்றும் மாவட்ட மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பட்டயப் படிப்புக் கல்லூரி, இளங்கலைக் கல்லூரியாகத் தரம் உயர்த்தப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பட்டயப் படிப்புக் கல்லூரி கடந்த

ஆண்டுதான் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

நடமாடும் நியாய விலைக் கடை

***4606—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மலைப் பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மலைப் பகுதியில் உள்ள 198 கிராமங்களில் வாழும் 23,978 குடும்ப அட்டைதாரர்களுக்கு 9 கூட்டுறவு நிறுவனங்களின்மூலமும், 26 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 36 பகுதிநேர நியாய விலைக் கடைகள், ஆக மொத்தம் 62 நியாய விலைக் கடைகள்மூலமும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள, தாளவாடி மலைப் பகுதியிலுள்ள EP 071 கேர்மாளம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்ட J.R.S. புரம் மற்றும் காணக்கரை ஆகிய இரண்டு மலைக் கிராமங்களுக்கு நகரும் நியாய விலைக் கடைமூலம் அத்தியாவசியப் பொருட்கள் பிரதிவாரம் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் வழங்கப்பட்டு